# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஏப்ரல் 25, 2026

Weekly E-paper ● April 25, 2026




## மே 4, என்ன சொல்லப் போகிறது?

சுப.வீரபாண்டியன்

### மகளிர் இடஒதுக்கீட்டைத் தடுக்கும் "Census + Delimitation"

சொக்கலிங்கம்

### நேரு சொல்கிறார்

தலையங்கம்

### வெள்ளுடை வேந்தர் சர்.தியாகராயர்

அனுவர்ஷினி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஏப்ரல் 25, 2026 Weekly E-paper ● April 25, 2026


# மே 4, என்ன சொல்லப் போகிறது?

**சுப.வீரபாண்டியன்**



தமிழ்நாடு இதுவரை காணாத வகையில், ஏறத்தாழ 90% வாக்குகள் இம்முறை பதிவாகி இருக்கின்றனவே, இது எதன் அறிகுறி?

இதற்கு மூன்று காரணங்கள் இருக்கலாம்.

1. திமுக, அதிமுக என்னும் இரண்டு கூட்டணிகளைத் தாண்டி நடிகர் விஜய் கட்சியும் இம்முறை முதல் முறையாகப் போட்டியிடுகிறது. எனவே மூன்று கட்சிகளின் வாக்காளர்களும் வாக்களித்திருப்பதால், வாக்குப் பதிவின் அளவு கூடுதலாகி இருக்கலாம்.
2. இம்முறை பெண்களின் வாக்குகள் வழக்கத்தை விடக் கூடுதலாகப் பதிவாகி இருக்கின்றன. திமுக அரசின் கடந்த காலச் செயல்பாடுகள் பெண்களிடையே பெற்றுள்ள வரவேற்பின் எதிரொலியாக இது இருக்கலாம்.
3. தேர்தலில் வாக்களிப்பது நம் கடமை என்னும் விழிப்புணர்வு மக்களிடம் கூடியிருக்கலாம்!



எம்ஜிஆர் அடுத்தடுத்து மூன்று முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறார்! ஜெயலலிதாவும் 2011, 2016 என இரண்டு முறை முதலமைச்சராகி இருக்கிறார். ஆனால் திமுக அடுத்தடுத்து ஒரு முறை கூட வெற்றி பெறவில்லை என்று கூறுகின்றனரே!

ஆம், இப்படி ஒரு பரப்புரை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இது உண்மையும் இல்லை, பகுத்தறிவுக்கு ஏற்றதும் இல்லை!

இதுவரை நடக்காத எதுவும், இனி நடக்காது என்று சொல்லுவது பகுத்தறிவாகாது! மேலும் இந்தச் செய்தி உண்மைக்கு மாறானது!

1967, 1971 என அடுத்தடுத்து இரண்டு முறை தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சிக்கு வந்தது தி.மு. கழகம்தான்!

இதுவரையில் காரைக்குடி என்று ஒரு ஊர் இருப்பதே யாருக்கும் தெரியாமல் இருந்தது. இப்போது, தான் தேர்தலில் இந்தத் தொகுதியில் போட்டியிட்டதால்தான் உலகத்தில் உள்ள கடைசித் தமிழனுக்கும் காரைக்குடி என்னும் ஊர் இருப்பது தெரி ய வந்திருக்கிறது என்று சீமான் கூறியிருக்கிறார்.

ஒரு மனிதனுக்கு இவ்வளவு ஆணவம் இருக்கக் கூடாது, இருக்கவே கூடாது!

1947 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில், இலட்சக்கணக்கான காணவர்கள் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் பயின்று வெளி வந்திருக்கிறார்கள். அழகப்பரால் காரைக்குடிக்குக் கிடைத்த கல்வி வெளிச்சம், அந்த ஊரின் பெருமையை உலகுக்குப் பறை சாற்றியுள்ளது!



காரைக்குடியில் பிறந்த அல்லது வளர்ந்த, தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலை உலகினர், கல்வியாளர்கள் என்று பெயர்களைக் குறிப்பிட்டால், அது ஒரு நீண்ட பட்டியலாக அமையும்!

காரைக்குடிக்கு என்று இன்னும் பல பெருமைகள் உண்டு எல்லாவற்றையும் மறைத்து விட்டு, தான் போட்டியிட்டதால்தான் அந்த ஊரின் பெயரே உலகிற்குத் தெரிந்தது என்று சொல்வது, காவிரி ஆற்றின் பெருமை, அதற்கு நெடுந்தூரம் தள்ளி, எங்கோ ஓடும் ஒரு சாக்கடையால் தான் உலகிற்குத் தெரிந்தது என்று கூறுவதைப் போலிருக்கிறது!



## ஆழ்ந்த இரங்கல்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைத் தலைவரும், திராவிட நட்புக் கழகத்தின் தலைவருமான தோழர் சிங்கராயர் அவர்களின் அம்மா மோட்சமேரி (87) அவர்கள், 23.04.26 மதியம், திருவாடானை அருகில் உள்ள ஓரிக்கோட்டையில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை எல்லாம், திமுக கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக் கொண்டிருந்த அம்மா மோட்சமேரி, காலையில் வாக்குச்சாவடிக்குச் சென்று தன் வாக்கைச் செலுத்தி விட்டு வீடு திரும்பிய பின், மாரடைப்பால் மறைந்து விட்டார்!

அவருக்கு நம் இறுதி வணக்கத்தையும், அவர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதி நிகழ்வில், நம் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராசு மற்றும் சிவகங்கை மாவட்டத் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

# மகளிர் இடஒதுக்கீட்டைத் தடுக்கும் "Census + Delimitation"

சொக்கலிங்கம்



*சட்டமியற்றும் அரசியல் மன்றங்களில் "மகளிர் இடஒதுக்கீடு" கொண்டு வருவது, ஒன்றிய பா.ஜ.க அரசின் "Census + Delimitation" என்ற சூழ்ச்சியால் தொடர்ந்து தள்ளிப்போடப்பட்டு வருகிறது.*

*19 செப்டம்பர் 2023 அன்று மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. "Census + Delimitation" முடிந்த பிறகே அமல்படுத்தப்படும்" என்ற தந்திரமான நிபந்தனையுடன் கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவின் உள்நோக்கத்தை முன்கூட்டியே உணர்ந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், 20 செப்டம்பர் 2023 அன்றே இந்தத் தாமதச் சூழ்ச்சி குறித்து எச்சரித்தார். இருப்பினும், மகளிர் நலனை முன்னிறுத்தி இந்தியா கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இந்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தன.*

*16 ஏப்ரல் 2026 அன்று மகளிர் இடஒதுக்கீடு மசோதா அரசியலமைப்புத் திருத்தச் சட்டமாக அறிவிக்கப்பட்டது. அதே நேரத்தில், பா.ஜ.க 2011 Census கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு 543 தொகுதிகளை 850 ஆக உயர்த்தும் 131வது அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதாவை முன்மொழிந்தது. இது வடமாநிலங்களுக்கு அரசியல் அதிகாரத்தை அதிகரித்து, மக்கள்தொகையை கட்டுப்படுத்திய தெற்கு மாநிலங்களை, குறிப்பாக தமிழ்நாட்டை, கடுமையாகப் பாதிக்கும் ஆபத்தான சதித்திட்டம். இதனை தி.மு.க உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் தீர்க்கமாக முறியடித்தன.*

*இதையொட்டி, பா.ஜ.கவும் அ.தி.மு.கவும் "மகளிர் இடஒதுக்கீட்டை தி.மு.க முறியடித்துவிட்டது" என்று பொய்ப் பரப்புரை செய்கின்றன. உண்மை என்னவென்றால், மகளிர் இடஒதுக்கீட்டுச் சட்டம் 16 ஏப்ரல் 2026 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. முறியடிக்கப்பட்டது அந்தச் சட்டம் அல்ல. தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைச் சுருக்கும் பா.ஜ.கவின் 131வது சட்டத்திருத்தச் சதித்திட்டமே முறியடிக்கப்பட்டது.*

*இதற்குப் பிறகு, மகளிர் இடஒதுக்கீட்டை உடனடியாகச் செயல்படுத்த "Census + Delimitation" நிபந்தனையை நீக்க வேண்டும் என தி.மு.க எம்.பி. வில்சன் தனிநபர் மசோதா கொண்டுவந்தார். ஆனால் பா.ஜ.க அதை விவாதத்திற்கே எடுத்துக்கொள்ளவில்லை.*

*பேரறிஞர் அண்ணா "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று எச்சரித்தார். பா.ஜ.கவின் Delimitation சதி அதை மீண்டும் உண்மையாக்கும் அபாயம் உள்ளதால், இந்த விவகாரத்தில் தி.மு.கவின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது. மகளிர் இடஒதுக்கீட்டை "Census + Delimitation" திட்டத்திலிருந்து பிரித்து (Delink) 543 தொகுதிகளிலும் உடனடியாக அமல்படுத்த வேண்டும். OBC, SC, ST, சிறுபான்மையினருக்கு உள் ஒதுக்கீடு சேர்க்க வேண்டும். Caste Census நடத்த வேண்டும். 1971 Census அடிப்படையிலான Delimitation Freeze மேலும் 25 ஆண்டுகள் நீட்டிக்கப்பட வேண்டும். தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் எல்லைகள் மட்டும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.*


*மகளிர் நலனில் தி.மு.கவுக்கு அக்கறை இல்லை என்று பா.ஜ.கவும் அ.தி.மு.கவும் பொய் பேசுகிறது. 1974 இல் காவல்துறையில் மகளிர் நியமனம், 1989 இல்*

# வெள்ளுடை வேந்தர் சர்.தியாகராயர்

அனுவர்ஷினி, திராவிடப்பள்ளி மாணவர்

தமிழக அரசியல் வரலாற்றில் சமூக நீதிக்கான அடித்தளத்தை அமைத்த மாமனிதர் சர்.பிட்டி தியாகராயர் அவர்கள். நீதிக்கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான இவருடைய மறைவின் 101 ஆவது ஆண்டு இது.

நீதிக்கட்சியின் தந்தை என அழைக்கப்படும் இவர், 1916 ஆம் ஆண்டு பார்ப்பனர் அல்லாதோரின் நலனுக்காகத் “தென்னிந்திய நல உரிமைச் சங்கம்” (நீதிக்கட்சி) உருவாகக் காரணமாக இருந்தார். இதுவே பின்னாளின் தமிழ்நாட்டின் திராவிட இயக்கங்கள் வளர்ச்சியுடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வித்திட்டது.



எப்போதும் வெள்ளை உடையில் தோற்றம் தரும் இவ்வேந்தர் பெரும் செல்வந்தராகவும், ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தபோதும், ஆடம்பரங்களைத் தவிர்த்து எப்போதும் தூய வெள்ளை நிற ஆடைகளையே அணிந்தார். இந்த எளிமையே அவருக்கு “வெள்ளை உடை வேந்தர்” என்று அழியாத பெயரைப் பெற்றுத்தந்தது.

’மதிய உணவுத் திட்டத்தின் தந்தை’ சர்.தியாகராயர் சென்னை மாநகராட்சித் தலைவராக இருந்தபோது ஏழைக் குழந்தைகள் பசியின்றி கல்வி கற்க வேண்டும் என்பதற்காகத் தியாகராய நகரில் உள்ள பள்ளியில் முதன் முதலாக மதிய உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதுவே இன்றைய சத்துணவுத் திட்டங்களின் முன்னோடியாகும்.

வகுப்புவாரி இட ஒதுக்கீடு, அரசு வேலைவாய்ப்புகளில் அனைத்துச் சமூகத்தினருக்கும் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்பதற்காக “வகுப்புவாரி அரசாணை” (communal G.O) கொண்டுவரப்படுவதில் மிக முக்கியப் பங்காற்றினார்.

அதுபோல பெண்களுக்கு வாக்குரிமை என்பதில் நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதில் தியாகராயரின் பங்கு அளப்பரியது. இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் பெண்களுக்கு இந்த உரிமை கிடைக்க அவர் உறுதுணையாக இருந்தார்.

பதவி மோகமற்ற பண்பாளர் அவர். நீதிக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்றபோது, முதலமைச்சர் பதவித் தேடி வந்தபோதும் அதை ஏற்க மறுத்துவிட்டு மக்களுக்காகத் தொண்டாற்றுவதையே குறிக் கொளாகக் கொண்டவர் சர்.பிட்டி தியாகராயர் அவர்கள்.

அவர் மறைந்து நூறு ஆண்டுகள் ஆனாலும் அவர் ஏற்றிவைத்த சமூக நீதிச் சுடர் இன்றும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒளியூட்டி வருகிறது. இடஒதுக்கீடு, கல்வி மற்றும் சமத்துவப் பாதையில் நாம் நடைபோடுவதே அந்த வெள்ளை உடை வேந்தருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்

●

## முன்பக்கத் தொடர்ச்சி...

அரசு வேலையில் 30% இடஒதுக்கீடு, சொத்தில் சம உரிமை, மகளிர் சுய உதவிக்குழு தொடக்கம், 1996 இல் உள்ளாட்சியில் 33% இடஒதுக்கீடு, 2021 இல் அரசு வேலையில் 40% இடஒதுக்கீடு, நகர்ப்புற உள்ளாட்சியில் 50%, விடியல் பயணம், 2022 இல் புதுமைப்பெண், 2023 இல் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை என நீளும் இந்தச் சாதனைகளின் வரலாறே தி.மு.கவின் மகளிர் அக்கறைக்குச் சான்று.

மொத்தத்தில், "மகளிர் இடஒதுக்கீடு + மாநில உரிமைகள்" என்ற இரட்டைக் கொள்கையை நிலைநாட்டவே, "Census + Delimitation" திட்டத்திலிருந்து பிரித்து, மகளிர் இடஒதுக்கீட்டை உடனடியாக செயல்முறைப்படுத்த தி.மு.க உறுதியாக நிற்கிறது.

●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## நேரு சொல்கிறார்

முசோலினியைச் சந்தித்தபின்னர் மூஞ்சேயால் வடிவமைக்கப்பட்ட ஆர்எஸ்எஸ் ஒரு பாசிச மக்கள் விரோத சக்தியாக வளர்ந்து நிற்கிறது.

ஜவகர்லால்நேரு, "குறித்துக்கொள்ளுங்கள். இந்தியாவின் அபாயம் கம்யூனிசம் அல்ல. இந்துமதவாதம் தான்" என்று ஒற்றைவரியில் ஆர்எஸ்எஸ்- ஐ அடையாளம் காட்டி இருக்கிறார். பொதுவுடைமைசமத்துவத்தின் அடையாளம். மதவாதம் பாசிசத்தின் உள்ளடக்கம்.

மதம்வேறு, அரசியல்வேறு. இரண்டையும்ஒன்றுபடுத்தக் கூடாது என்று சில அரைவேக்காடுகள் பேசுவார்கள். சரியாகச் சொன்னால் 'மதம்' என்பதே அரசியல்தான். அதற்கு வரலாறு நெடுகிலும் சான்றுகள் உள்ளன.

அயோத்திக்கு அத்வானி சென்ற ரதயாத்திரையில் மதம் மட்டும்தான் இருந்ததா? அரசியல் இல்லையா? மக்களை அரசியல்மயப் படுத்துவது என்பது வேறு. மத அரசியல் படுத்துவது என்பது வேறு.

மத அரசியல் கலவரங்களை உருவாக்கும். முற்போக்குச் சிந்தனையாளர்களைக் கொலை செய்யும். சனாதனத்தை வேரூன்றச் செய்யும். இந்து என்ற பொதுப் பெயரில் மக்களைத் திரட்ட மதத்தைப் பேசும். ஆனால் அங்கு பார்ப்பனர்கள் மட்டுமே இந்துக்களாகக் கருதப்படுவார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் பெயர் தேசியம், இந்து தேசியம், இந்துராஷ்டிரம்.

திருப்பரங்குன்றத்தில்'தீபத்தூணில்'தீபம்ஏற்றவேண்டும் என்பதில் மதம் அரசியலுடன் இருக்கிறது. இதுதான் கலவரத்தை உருவாக்கும் நெருப்பு.

உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார் போன்ற வடமாநிலங்களில் மதம் (ஆர்எஸ்எஸ்) மக்களைப் பிரித்து வைத்து ஒற்றுமையை, அமைதியை சிதைத்துப் போட்டதுபோலத் தமிழ்நாட்டையும் ஆக்கப் பார்க்கிறது ஆர்எஸ்எஸ்/பாஜக.

தமிழ்நாட்டில் ஆர்எஸ்எஸ்-ஐக் கால் ஊன்ற விடாமல் தடுத்துக்கொண்டு இருப்பது ஐயா பெரியாரின் சித்தாந்தம்.

இனியும், எப்போதும் அதைத் தமிழ்நாட்டில் காலூன்ற விடாமல் தடுத்து விரட்ட வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது. பகுத்தறிவு வலுப்பெற்றால் பாசிசம் நாசமாகும்!

## தலைவரின் பிறந்தநாள்



திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களுக்கு 22-04-2026 அன்று அவரின் 74 ஆம் ஆண்டு பிறந்தநாள் வாழ்த்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்:
**வெற்றிச்செல்வன்**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408